**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.344/2021**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகேசன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | குளச்சல் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 16th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஊத்துமலை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்தபோது, 30.09.2019 அன்று காவல்நிலையக்குற்ற எண்.436/2019 வழக்கு கோப்பினை என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

காலை 09.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் தங்கபாண்டி மற்றும் சுப்பையா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.8** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.9** ஆகும். சாட்சிகள் அருணாகரன், காவலர் முத்துராஜப்பா, மாடக்கண்ணு, பொன்ராஜ், தங்கப்பாண்டி, சுப்பையா மற்றும் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சின்னத்துரை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இந்த வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததினால், எதிரிகளை தேடி வந்த நிலையில், 30.09.2019ம் தேதி, மதியம் 02.00 மணியளவில் பாவூர்சத்திரம் கே.டி.சிநகர் சர்ச் அருகே வைத்து எதிரிகள் அருணாச்சலம் என்ற வினோத், தங்கபாண்டியன் ஆகியோர்களை கைது செய்து, சாட்சிகள் ராஜா மற்றும் சுந்தர்ராஜா ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி அருணாச்சலம் என்ற வினோத் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்புக்கம்பிகளை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10 ஆகும்.** பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 03.30 மணிக்கு கீழப்பாவூர் ஊருக்கு கீழ்புறமுள்ள குளத்தில் முட்புதரில் வைத்து எதிரி எடுத்து ஆஜர் செய்த 2 இரும்புக்கம்பிகளை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அத்தாட்சி **அ.சா.ஆ.11 ஆகும்.**

எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.12** ஆகும். 2 இரும்பு கம்பிகள் – அ.சா.பொ.1 வரிசை ஆகும். பின்னர், சாட்சிகள் ராஜா மற்றும் சுந்தர்ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் 09.10.2019ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 307, 506(2) IPC -ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1000ற்கு மேல் மக்கள் கூடும் இடத்தில் 10க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றால் சரிதான். சம்பவநாள் நிறைய கோவில்களில் கொடை விழா நடந்ததினால் பி போலீஸ் மட்டும் சென்றார்கள். நான் சொல்லும் இந்த விபரம் விசாரணை கோப்பில் துலங்காது என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பில் அ.சா.1 தனிஅறிக்கை கொடுத்த விபரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை காலம் எண்.3சி-யில் பொதுநாட்குறிப்பு குறித்த விபரம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். டூட்டி ரிஜிஸ்டரில் பணி விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

அ.சா.1, அ.சா.2 ன் பாக்கெட் டைரி, பீட் டைரி ஆகியவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பு பதிவுகள் மற்றும் டூட்டி ரிஜிஸ்டர் பதிவுகள், பாக்கெட் டைரி பதிவுகள், பீட் டிக்கெட்டுகள் இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கீழப்பாவூர் கருப்பசாமி கோவிலுக்கு வடபுறம் ஒரு மைதானமும், கிழக்கு பக்கம் ஒரு மைதானமும் இருக்கிறது என்றால் சரிதான். இரண்டு மைதானத்திற்கும் நடுவில் அருணாப்பேரிக்கு போகும் ரோடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 தனிஅறிக்கையிலோ, அ.சா.1, அ.சா.2

ஆகியோர்களின் வாக்குமூலத்திலும், முதல்தகவல்அறிக்கையிலோ சம்பவம் எந்த மைதானத்தில் வைத்து நடந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெறாததினால் தான் அவ்வாறு நடைபெறவில்லை என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

பாவூர்சத்திரம் காவல்நிலையத்திலிருந்து தென்காசி நடுவர் நீதிமன்றம் அரை மணி நேரத்தில் வந்து விடலாம். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு உடனடியாக முதல்தகவல்அறிக்கை அனுப்பி வைத்தோம். 30.09.2019 இரவு 09.00 மணிக்கு முதல்தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 13 மணி நேரம் காலதாமதத்துடன் அனுப்பப்பட்டதற்கு காரணம் என்னவென்று விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையம் 15 நிமிடத்தில் வந்து விடலாம்.

சம்பவ நாளன்று அ.சா.1 ஏன் புகார் கொடுக்கவில்லை என்று நான் விசாரித்தேனா? என்றால் அவர்கள் பீட் முடித்து விட்டு வந்து புகார் கொடுத்தார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறாததினால் தான் சம்பவநாள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் மைதானத்தின் எந்த பகுதியில் நடந்தது என்று அ.சா.ஆ.1 தனி அறிக்கையிலோ, அ.சா.1, அ.சா.2 வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால் தான், மைதானத்தில் எந்த பகுதியில் சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் பாட்டு கச்சேரிக்கு இடையூறு செய்ததாக பொதுமக்களோ, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களோ அ.சா.1, அ.சா.2 -மோ எழுத்து மூலமாகவோ, வாய்மொழி வாயிலாகவோ புகார் கொடுத்ததாக துலங்காது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறாததினால் தான் பொதுமக்களோ, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களோ அ.சா.1 மற்றும் அ.சா.2டம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவநாளில் இரவு 09.00 மற்றும் 10.00 மணிக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவங்களுக்கு பிறகு அ.சா.1, அ.சா.2 டோ காவல்நிலையத்திற்கு போன் மூலம் தகவல் சொல்லி கூடுதல் காவலர்களை பாதுகாப்பு பணிக்கு அனுப்ப கேட்கவில்லை என்றால் சரிதான்.

23.09.2019ம் தேதி, இரவு பாட்டுக்கச்சேரியில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ 10 நிமிடங்கள் அரசு பணி செய்யவிடாமல் தடுத்ததாக அ.சா.ஆ.1ன் தனிஅறிக்கையிலோ, முதல்தகவல்அறிக்கையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தொடர்ந்து பாட்டு கச்சேரி முடியும் வரை பணி செய்துள்ளார்கள். ரோந்து பணியும் செய்துள்ளார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் அரசுப்பணி பாதிக்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கையை என்னிடம் யார் ஒப்படைத்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் சின்னத்துரை என்பவர் ஒப்படைத்தார். உதவி ஆய்வாளர் சின்னத்துரையை எந்த தேதியில் நான் விசாரித்து, வாக்குமூலம் பெற்றேன் என்றால் 30.09.2019 அன்று விசாரித்தேன். உதவி ஆய்வாளர் சின்னத்துரையின் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேனா? என்றால் அனுப்பியுள்ளேன்.

நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சின்னத்துரை என்பவரை சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேனா? என்றால் விடுபட்டுள்ளது. உதவி ஆய்வாளர் சின்னத்துரையை சாட்சியாக விசாரித்தால், வழக்கிற்கு பாதிப்பு ஏற்படும் என்பதினால் அவரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 தனி அறிக்கை கொடுத்தாரா? என்றால் கொடுத்துள்ளார். தனி அறிக்கை செய்துள்ளேனா? என்றால் செய்துள்ளேன். தனிஅறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன். நான் சொன்ன நாள், நேரத்தில் தனி அறிக்கை பெற்று முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரம், விதம் இடத்தில் வைத்து சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சம்பவயிடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயாரிக்கவில்லை என்றாலும், எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும், 1வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அத்தாட்சி பிறப்பிக்கப்பட்டு சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

எதிரிகள் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் வைத்து நடைபெறும் சம்பந்தமாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுப்பார்கள்என்றாலும், அதனால் எங்களுக்கு எதிரிகள் கோபம் இருந்தது என்றாலும், எதிரிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட தனிஅறிக்கை பெறப்பட்டதில் அவைகள் இந்த வழக்கிற்கு விரோதமாக இருந்ததினால் என்னுடைய ஆலோசனையின் பேரில் அவைகள் மறைக்கப்பட்டு, பின்யோசனையின்பேரில் ஒரு பொய்யான தனி அறிக்கை உற்பத்தி

செய்யப்பட்டு, முதல்தகவலஅறிக்கை பதிவு செய்ப்பட்டு அதனை அனுசரித்து, சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் பிழையான இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி நாகர்கோவில் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt.D.Sahayarani, Typist, முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.18 14:05:08 +0530